Registered as a NewsPaper

விலை ரூபா 6.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி - 12 26-03-2003 புதன் கிழமை ஓசை 36

தேவையை நிறைவு செய்து
நேரத்தை மீதுப்படுத்த
புடைவைத் தெரிவுக்கு
வவுனியா நகரில்...

SHANDHA TEX

பஜார் வீதி, வவுனியா.

T.P:24-22879 (☏ 7649)

- ஈராக்கில் ஆறாவது நாளாக யுத்தம் நீடிப்பு -


# கடும் எதிர்ப்பு, பாலைவனப்புயல் காரணமாக அமெ. பிரிட்டிஸ் படைகளின் முன்னேற்றம் பாதிப்பு

## பாக்தாத் மீது தொடர்ந்தும் குண்டுவீச்சு

**அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் பாக்தாத் நகரர் நோக்கிய முன்னேற்றம் ஈராக் படையினரின் மூர்க்கத்தனமான எதிர்த்தாக்குதலாலும், பாலைவனப்புயல் காரணமாகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக அமெரிக்க தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, பாக்தாத் நகர் மீது அமெரிக்க போர்விமானங்கள் தொடர்ச்சியாகக் கடும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.**

அமெரிக்காவின் 3ஆம் தரைப்படைப்பிரிவு நஸ்ரியா என்ற முக்கிய நகரத்தில் இருந்து 160 கிலோ மீற்றர் வடக்கே சென்றுள்ளதாகவும் சில முன்னணி ராணுவ பிரிவுகள் பாக்தாத்திற்கு 70 கிலோமீற்றர் முன்பாக இருப்பதாகவும் இருப்பினும் அங்கு வீசும் மணல் புயல் சிலநூறு யாருக்கு மேல் எதுவும் தெரியாத அளவுக்கு மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் உலங்கு வானூர்திகள் பறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்

(8ஆம் பக்கம் பார்க்க)





## அமெ. தோல்வியை ஒப்புக்கொண்டால் அமைதித்தீர்வு காணத்தயாராக உள்ளோம்!

### ஈராக் துணைப்பிரதமர் தாரிக் அசீஸ்

(பாக்தாத்)

அமெரிக்க கூட்டணிப் படைகள் தோல்வியை ஒப்புக் கொண்டால் இப் பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணத் தயாராக இருப்பதாக ஈராக் துணைப் பிரதமர் தாரிக் அசீஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க படையினருக்கு இந்த போரா மிகவும் செலவுமிக்கதாக இருக்க வேண்டும் என்பதால் எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க வேண்டாம் என்று அரபு நாடுகளை ஈராக் கேட்டுக்கொண்டுள்ளது.

பாக்தாத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்த எண்ணெய்வள அமைச்சர் ஈராக் மீதான இந்தப்போர் ஈராக் மக்களுக்கு எதிரான குற்றம் என்று கூறினார்.

இதனிடையே ராணுவத் தளபாடங்களுடன் மேலும் ஆறு கடற்படைக் கப்பல்கள் சுயஸ்கால் வாய்க்குள் நுழைந்திருப்பதாக செய்தி ஒன்று கூறுகின்றது.

## ரஷ்யா ஈராக்கிற்கு உதவுவதாக அமெ.அதிபர் புஷ் குற்றச்சாட்டு!

ரஷ்யா ஈராக்கிற்கு நவீன இராணுவ உபகரணங்களையும், பயிற்சிகளையும் வழங்கி வருவதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது. அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் நேரடியாக ரஷ்யா சனாதிபதி விளாடிமின் புட்டினுக்கு இது குறித்து கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

கடந்த 22ஆம் திகதி தவறுதலான வெடிவிபத்தின் போது போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

மேஜர் சாருமதி (செல்வநாயகம் உமாதேவி, தனங்கிளப்பு, சாவகச்சேரி. தற்காலிக முகவரி: பாலியாறு குடியேற்றத்திட்டம், வெள்ளாங்குளம்) என்பவரே

(8ஆம் பக்கம் பார்க்க)

## குடாரப்புத் தரையிறக்க மூன்றாம் ஆண்டு வெற்றிவிழா

ஆனையிறவு வெற்றிக்கு வழிசமைத்த கடற்புலிகளின் வீரம் குடாரப்பு தரையிறக் கத்தின் 3 ஆம் ஆண்டு வெற்றி விழா தரையிறங்கிய அதே இடத்தில் மிகவும் எழுச்சியாக இன்று கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த இடத்தில் நினைவுக்கல்லும், திரைநீக்கம் செய்யப்படவுள்ளதுடன் பிரமாண்டமான மேடையில் இரவு கலை நிகழ்ச்சியும் நடைபெற வுள்ளது என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (11)

## - பளை-தர்மக்கேணிச் சந்தியில் -

## ஆறு பிள்ளைகளின் தந்தை வாகனம் மோதி மரணம்!



(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 பிரதான வீதியில் வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்தில் பலியானார்.

மேற்படிச் சம்பவம் நேற்றுக்காலை 10.00 மணியளவில் பளை தர்மக்கேணிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இது பற்றித் தெரியவருகையில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் ஆலய பூசைக்கு பொருட்கள் வாங்கு வதற்காக துவிச்சக்கர வண்டியில் பளைக்குச் சென்று வருவதாக கூறிவிட்டுச் சென்கையில் வீதியில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## தேவையான எரிபொருளில் 1/3 பகுதியே கிளி.மாவட்டத்திற்கு கிடைக்கிறது!

### - கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர்.

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்டத்திற்குத் தேவையான எரிபொருளில் மூன்றில் ஒரு பகுதியே அனுப்பிவைக்கப்பட்டு வருகிறது. என கிளி. மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகன் தெரிவித்தார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் கடந்த சில வாரகாலமாக எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. குறிப்பாக பெற்றோலினிற்கே பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

இது குறித்து கிளி.மாவட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

## சீனக்கப்பல் மூழ்கடிப்புக்கும், புலிகளுக்கும் தொடர்பில்லை

### கண்காணிப்புக்குழுவிற்கு புலிகள் அறிக்கை

முல்லைத்தீவு கடற்பரப்பில் சீன மீன்பிடிப் படகு தாக்கப்பட்டமை குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு விடுதலைப் புலிகள் நீண்ட அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளனர்.

கடற்புலிகளின் தளபதிகளில்

(8ஆம் பக்கம் பார்க்க)

# கரைச்சிக் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிக்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி நேற்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் காலை 10.00 மணிக்கு பித்து வைத்தார்.

கிளிநொச்சி கோட்ட 20 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் மேற்படி கோட்டமட்டப்போட்டியில் கலந்து கொண்டனர்.



படம்: சோதி

ஆரம்பமாகியது.

கிளிநொச்சி வலயப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சிவசாமி அவர்கள் கலந்து கொண்டு தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றி விளையாட்டுப் போட்டியினை ஆரம் இப் போட்டியில் தெரிவு செய்யப்பெறும் பாடசாலைகள் மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவுள் ளன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (சோ,லோ)

# யாழ். குடா நாட்டில் தொண்டராசிரியர்கள் மறியல்

யாழ். குடாநாட்டில் உள்ள ஐந்து கல்வி வலயங்கள் முன்பாகவும் தொண்டர் ஆசிரியர்கள் நேற்றுக் காலை முதல் மாலைவரை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து கல்வி வலயங்களின் பணிகள் முற்றாக செயலிழந்தன.

இதேவேளை இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து தொண்டர் ஆசிரியர் குழுவொன்று திருகோணமலைக்கு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு போராட்டத்தில் ஈடுபடும் தொண்டர் ஆசிரியர்களுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபடும் அதேவேளை ஏனைய தொண்டராசிரியர்களுடன் இணைந்து மாகாண கல்வி அமைச்சுக்கு முன்னால் மறியல் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளனர்.

ஏற்கனவே திருகோணமலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தொண்டராசிரியர்களுடன் திருகோணமலை, மன்னார் மாவட்ட தொண்டராசிரியர்கள் இணைந்துள்ள அதேவேளை அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பணிநிலை வேண்டுகை

***வன்னியில் பல கிளைகளைக் கொண்டியங்கும் முன்னணி நிறுவனத்திற்கு கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையும் முன்பட்டறிவு முடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.***

**பணிநிலைகள்:-**

பணிநிலை - 01. கணக்குப் பதிவாளர்
02. களஞ்சியக் காப்பாளர்
03. எழுதுநர்கள்
04. உணவு பரிமாறுபவர்
05. பாதுகாப்புப் பணியாளர்
06. சமையலாளர்
07. விற்பனையாளர் (Hardware; Building Materials, Spair parts)

**கல்வித் தகைமை:**

1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு:
க.பொ.த. (சாதாணதர) தேர்வில் தேர்ச்சியும், மேற்பட்ட கல்வித் தகைமைகளும்
4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
10ஆம் வகுப்பில் கற்றிருத்தல் வேண்டும்.
**6ஆம் பணிநிலைக்கு:**
ஹோட்டல் முகாமைத்துவம் கற்கைநெறியில் தேர்ச்சியடைந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு.
7ஆம் பணிநிலைக்கு:
8ஆம் வகுப்பில் தேர்ச்சியடைந்திருத்தல்.

**அகவையெல்லை** : 18-50
**பால்** : இருபாலாரும்
**பட்டறிவு** :-

**1ஆம், 2ஆம், 3ஆம் பணிநிலைகளுக்கு:**
குறித்த பணியில் ஓர் ஆண்டுக்கு குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.
4ஆம், 5ஆம் பணிநிலைகளுக்கு:
குறித்த பணியில் நன்மதிப்புள்ள நிறுவனமொன்றில் இரண்டாண்டு பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6ஆம் பணிநிலைக்கு:
மேனாட்டு, உள்நாட்டு உணவு தயாரிப்பில் 2ஆண்டுகளுக்குக் குறையாத பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.
7ஆம் பணிநிலைக்கு:
இரும்பகம், கட்டடப்பொருள், வாகன உதிரிகள் விற்பனை நிலையத்தில் பணியாற்றிய பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமையுண்டு.

**நிறுவனம் வழங்கும் சிறப்புச் சலுகை**

- உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.
- தொலைவிடங்கயிலிருந்து வரும் பணியாளர்களுக்கு போக்குவரத்து வசதிசெய்து கொடுக்கப்படும்.

வேண்டுகைகள் யாவும் கீழ்காணும் முகவரிக்கு தங்கள் சொந்தக் கையெழுத்தினால் எழுதி, 31.03.2002ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல: 45**
**மே/பா ஈழநாதம், யாழ்சாலை, கிளிநொச்சி**

(கி-8035)


# வவுனியா கல்விக்கோட்ட விளையாட்டுப் போட்டி நாளை

வவுனியா கல்விக்கோட்ட விளையாட்டுப் போட்டி நாளை மாலை 2.00 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத் தில் நடைபெறவுள்ளது.

வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி கணேசராஜா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளரும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா நகரசபை செயலாளர் செல்வராஜாவும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# நியாப் திட்டங்கள் குறித்து கிளி.செயலகத்தில் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

கடந்த வருடங்களில் நியாப் திட்டத்தின் மூலம் கிளி. மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் நடப்பு வருடத்தில் மேற்படி நிறுவனத்தினரால் துரித கதியில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை கிளி. அரசஅதிபர் தி. இராசநாயகம் தலைமையில் கிளி. அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 9.30 மணியளவில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் அரச திணைக்கள பிரதிநிதிகள் மற்றும் துறைசார் தொடர்புடைய அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் வேண்டியுள்ளார். (சோ,லோ)

# மீள்குடியேற்றம் குறித்த கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

மீள்குடியேற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை கிளி. கரைச்சி பிரதேச செயலத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மாலை 2.30 மணிக்கு கரைச்சி பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் 'நிக்கொட்' நிறுவன திட்டப்பணிப்பாளர் லங்காநேசன் கலந்து கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமசேவை அலுவலர்கள் மற்றும் ஊரகவளர்ச்சிக் குழுவினருக்கும் மீள்குடியேற்றம் தொடர்பான கருத்துரைகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ, லோ)


## விழாக்கால சிறப்பு வாணிப உரிமம்

**எதிர்வரும் 2003-03-31ஆம் நாள் இடம்பெறவுள்ள பொறிக்கடவை அம்மன் ஆலய ஆண்டுப் பொங்கல் நிகழ்வில் வாணிபம் நடத்தவுள்ளோர் 2003-03-27ஆம் நாள் தொடக்கம் கீழ்க்குறிப்பிடப்படுமிடங்களில் விழாக்கால சிறப்பு வாணிப உரிமத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.**

1. விழாக்காலச் சிறப்புச் செயலகம், பொறிக்கடவை
2. வருவாய்ப்பகுதிச் செயலகம், கிளிநொச்சி

வருவாய்ப்பகுதி,
கிளிநொச்சி.

(3043)



## வைத்தியர் பதவி வெற்றிடம்

இலங்கை செஞ்சிலுவைச்சங்க முல்லைத்தீவுக் கிளையினால், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படுகின்ற நடமாடும் வைத்தியசேவையில் சேவையாற்ற தகுதியுடையோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

01. எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்றவர் அல்லது ஆர்.எம்.ஓ.
முகுறிப்பு:- ஆர்.எம்.ஓ இலங்கை வைத்திய சங்கத்தினால் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

02. வேதனம்:- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் தகுதிக்கேற்ப நிர்ணயிக்கப்படும். (உத்தேச வேதனம் ரூபா 13,000/= வரையில் அத்தோடு, 15% வாழ்க்கைப்படியும் வழங்கப்படும்.)

விண்ணப்பதாரிகள் தகைமைச் சான்றிதழ்களை நிழற்பிரதியுடன், தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், முல்லைத்தீவுக் கிளை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு 10-04-2003ஆம் திகதிக்கு முன்பு அல்லது அன்றைதினம் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**வைத்தியக்கலாநிதி து.வி.ஜெயகுலராஜா,**
தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
முல்லைத்தீவுக் கிளை.

(கி-7731)

# தலைநகருக்காக மூவாயிரம் படையினரை அமெரிக்கா விலையாகக் கொடுக்க நேரிடும்!

## -ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி கருத்து

**ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தைக் கைப்பற்ற வேண்டுமானால் குறைந்தது மூவாயிரம் படையினரை அமெரிக்கா அதற்கு விலையாகப் பலிகொடுக்க வேண்டும் என அமெரிக்க முன்னாள் இராணுவ அதிகாரியொருவர் கருத்து வெளியிட்டுள்ளார். 1991-ம் வருட வளைகுடா யுத்தத்தில் பங்கேற்ற அதிகாரியே இதனைக் கூறியுள்ளார்.**

பன்னிரெண்டு வருடங்களுக்கு முன் அமெரிக்காவின் 24வது படைப்பரிவுக்குத் தளபதியாக இருந்த இந்த ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி இதுகுறித்து மேலும் குறிப்பிடுகையில்;

பாக்தாத்தைக் கூட்டுப்படைகள் கைப்பற்றலாம். எனினும் ஈராக்கியர்கள் முழு அளவினதான தாக்குதலை நடத்தத் தீர்மானித்தால் கூட்டுப்படையினர் மூவாயிரம் வீரர்கள் வரை இழக்க நேரிடும். அவ்வாறான உயிர்களை இழக்க விரும்பாவிட்டால் பாக்தாத்தையும் வடமேற்கே ரெக்கிற் நகரையும் பிடிப்பது மிகவும் சிரமமான விடயமாக இருக்கும் என்றார்.

இது இவ்வாறிருக்க ஆறாவது நாளாக நேற்றும் ஈராக்கிய-அமெரிக்கப் படையினரிடையே கடுமையான மோதல்கள் இடம்பெற்றன. பாக்தாத்திலிருந்து 100 கிலோ மீற்றர் தூரத்தில் அமெரிக்கக் கூட்டுப்படைகள் நிலைகொண்டிருப்பதாகக் கூறப்படும் நிலையில் பல இடங்களில் அமெரிக்கக் கூட்டுப் படையினருக்கு இழப்புக்களும் பின்னடைவுகளும் ஏற்பட்டுள்ளன.

பாக்தாத்தை நோக்கிய நகர்வு பாதைகளிலும் மற்றும் நஜீப், நஸ்ரியா, உம்குசாத் அத்தோடு வடக்கேயுள்ள வோசில் நகரங்களில் ஈராக்கியப்படையினர் பல வழிமறிப்புத் தாக்குல்களை நடத்தியுள்ளனர். சில பகுதிகளில் எதிர்ப்பின்றி உள்நுழையவிட்டு அவர்கள் மீது சுற்றிவளைப்புத் தாக்குதல்களை ஈராக் படைகள் நடத்தியதில் பெரும் இழப்புக்களை கூட்டுப் படைகள் சந்தித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளின் உதவி இயக்குநர் மேஜர் ஜெனரல் சாம்னே வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தமது படைகள் கடும் எதிர்ப்பைச் சந்தித்து வருவதை ஒப்புக்கொண்டுள்ளார்.

## புஷ்-பிளேயர் சந்திப்பு

பிரிட்டிஸ் பிரதமர் ரொனி பிளேயர் இவ்வாரம் அமெரிக்கா சென்று சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சை சந்திக்கவுள்ளார்.

ஈராக் யுத்தம் தொடர்பாகவே இவர்கள் இருவரும் பேச உள்ளனர். இன்று அல்லது நாளை சனாதிபதி புஷ்சின் உல்லாசத் தளத்தில் இப்பேச்சுவார்த்தை இடம்பெறும்.

# 13 வருடங்கள் போரிடும் பலம் எம்மிடமுள்ளது

## -நஜி சப்ரி அறிவிப்பு

அமெரிக்காவுடனான யுத்தத்தை மேலும் பதின்மூன்று வருடங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடிய ஆயுதங்களும் பொருளாதார வசதிகளும் ஈராக்கிற்கு இருக்கிறது. இவ்வாறு ஈராக் வெளிவிவகார அமைச்சர் நஜி சப்ரி தெரிவித்தார்.

சிரியாவில் வைத்து அவர் செய்தி வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும்தெரிவிக்கையில் ஈராக்கில் 26 மில்லியன் சதாம் ஹுசைன்கள் உள்ளனர். அமெரிக்காவுக்கு எதிராக அரபு சகோதரர்கள் செயற்பட வேண்டும் என்றார்.



காயப்பட்ட தமது சகாவை C-141 ரக போக்குவரத்து விமானத்திலிருந்து தூக்கிச் செல்லும் அமெரிக்கப் படையினர்

# அரபு நாடுகளின் உயர்மட்டக் கூட்டத்தில் இஸ்ரேல், குவைத் மீது கடும் கண்டனம்

(கெய்ரோ)

ஈராக்கிற்கு எதிரான யுத்தத்தில் இஸ்ரேலும் பங்கேற்றிருப்பதாக ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

ஈராக் வெளியுறவு அமைச்சர் நஜி சப்ரி இந்தக் குற்றச்சாட்டை அரபு நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களின் கூட்டத்தில் தெரிவித்திருக்கின்றார்.

கெய்ரோவில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் இதுகுறித்து உரை நிகழ்த்திய நஜி சப்ரி ஈராக் மீது இஸ்ரேலிய ஏவுகணைகள் வீழ்ந்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஈராக்கிற்கு அயல் நாடுகளும் குறிப்பாக குவைத்தும் சகுனித் தனமாகச் செயற்படுவதை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

இந்த நாடுகள் அரபு நாடான ஈராக்கை ஆக்கிரமிக்க விழையும் அமெரிக்கா தலைமையிலான படையினருக்கு அளிக்கும் ஆதரவு அரபு நாடுகளுக்கு எதிரான மாபெரும் குற்றச்செயல் என்று கூறியுள்ளார்.

பாக்தாத்தில் வீசப்பட்ட ஏவுகணைகளில் இஸ்ரேலிய ஏவுகணைகளும் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக ஈராக் வெளியுறவு அமைச்சு தெரிவித்திருக்கும் அதேவேளை இஸ்ரேல் இதனை முற்றாக மறுத்திருக்கிறது.

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் சாகுல்முசாத் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவிக்கும் போது ஈராக்கில் வீழ்ந்த ஏவுகணைகள் இஸ்ரேலிய தொழில்நுட்ப உதவியோடு அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஏவுகணைகள் எனத்தெரிவித்துள்ளார்.

# சர்வதேச ஒளிபரப்பு சேவையை ஆரம்பிக்க பிரான்ஸ் முயற்சி

(பாரிஸ்)

சி.என்.என்,பி.பி.ஸி அல்ஜெசீரா போன்ற சர்வதேச ரீதியிலான தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றை உருவாக்கும் யோசனையில் பிரான்ஸ் அரசாங்கம் இறங்கியுள்ளது.

இதற்கான நகல் யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு உள்ளூர் ஊடக நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்சுக்கு முன்பிருந்தே இது போன்ற யோசனை இருந்து வந்தது.

அமெரிக்காவும்,பிரிட்டனும் அந்த நாட்டு அரசாங்கத்தின் அனுமதி இல்லாமல் ஈராக் மீது போரை ஆரம்பித்த பின்னர் அந்த எண்ணம் மேலும் வலுவடைந்து உள்ளது.

மேலும் ஈராக்கிய சம்பவங்கள் குறித்து சர்வதேச தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒருதலைப்பட்சமான செய்திகளை ஒலிபரப்புவது பற்றிய குற்றச்சாட்டுக்களும் பிரான்ஸின் கவனத்தைத் திசை திருப்பி உள்ளன.



பாக்தாத்திலிருந்து 150 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள கலார் என்ற இடத்தில் இருந்து வெளியேறும் அகதிகள்



காஷ்மீர் தீவிரவாதிகளால் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்ட 24 இந்துக்களின் சடலங்களும் ஒன்றாகத் தீயில் சங்கமமாகின்றன.

# ஜெயலலிதாவின் சர்வாதிகாரத்திற்கு ஹிட்லர் கதிதான் கிட்டும்!

## இளங்கோவன் எச்சரிக்கை

சர்வாதிகாரமாகச் செயற்படும் ஜெயலலிதாவுக்கு ஹிட்லர் கதிதான் ஏற்படும் என்று இளங்கோவன் கூறியுள்ளார்.


ஜெயலலிதா அரசு தொடர்ந்த வழக்கில் மதுரை நீதிமன்றத்தில் ஆஜராகி,வெளியே வந்த தமிழ் நாடு காங்கிரஸ்செயல் தலைவர் இளங்கோவன் நிருபர்களுக் குப் பேட்டி அளிக்கையில்;

ஜெயலலிதா அரசின் அநியாயம், அக்கிரமங்களுக்கு எதிராக நான் குரல் கொடுப்பதால் என்னை அடக்க நினைத்து வழக்குப் போட்டு இருக்கிறார்கள். இந்த வழக்கில் ஜெயலலிதா நீதிமன்றத்துக்கு வந்து ஆஜர் ஆக வேண்டும். அவரிடம் நான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும். என்றார்.

## போர் நடவடிக்கை பாதிப்பு

ஈராக்கிலும்,மத்திய தரைக்கடல் பகுதியிலும் மோசமான கால நிலை நிலவிவருவதால் போர் நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன.

மத்தியதரைக்கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள அமெரிக்க போர்க்கப்பலான தியோடர் ரூஸ்வெல்ட் இதன் காரணமாக ஏவுகணைத்தாக்குதலை நிறுத்தி வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது



குவைத் விமானப்படைக்குச் சொந்தமான அமெரிக்கத்தயாரிப்பு பட்ரியட்வகை ஏவுகணை குவைத் எல்லையில் நிறுத்தப்பட்டுள்ளது.

# வடமேல் மாகாணத் தேர்தலுக்கான தயாரிப்பில் குதித்துள்ள கட்சிகள்

அடுத்த வருட முற்பகுதியில் வடமேல் மாகாண சபையின் ஆயுட்காலம் முடியவுள்ள நிலையில் வடமேல் மாகாண சபையின் தேர்தலுக்கான தயாரிப்புகளில் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக்கட்சியும் தயாராகி வருவதாகத் தென்பகுதிச் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் அதனைத் தொடர்ந்து மேலும் மூன்று மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறக்கூடிய வகையில் அவற்றின் பதவிக் காலமும் முடிவடைவதால் தேர்தல் தயாரிப்பு சற்றுப் பலமாகவே இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இம் மாகாணங்களிலுள்ள இரு கட்சிகளின் அமைப்பாளர்களும் தேர்தல் ஒன்றை எதிர் கொள்வதற்கான தயாரிப்புகளில் தீவிரமாக ஈடுபடுமாறு முடுக்கிவிடப்பட்டுள்ளனர்.

இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் பரீட்சார்த்தமான தேர்தலொன்று பொதுசன ஐக்கிய முன்னணிக்குத் தேவைப்படுவது வெளிப்படையான - முன்னரே அறியப்பட்ட ஒரு விடயம் அதற்காக அது தென்மாகாண சபையைக் கலைத்துவிட்டுத் தேர்தலில் குதிப்பது குறித்து ஆராய்ந்து வந்தது.

ஜே.வி.பியுடன் முயற்சிக்கும் கூட்டு சாத்தியமாகும் பட்சத்தில்,ஜே.வி.பிக்கு அதிகளவு ஆதரவுள்ள அம் மாகாணத்தில் தேர்தல் ஒன்றைச் சந்திப்பதன் மூலம் தனது கட்சிக்குத் தற்போதுள்ள ஆதரவை நாடி பிடித்தறிய அது விரும்பியது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை எவ்வேளையிலும் கலைத்துவிடக் கூடிய அதிகாரத்தைக் கொண்டுள்ள போதிலும் பின்னர் நடைபெறும் தேர்தலில் வெற்றிபெற முடியுமா? என்று எழுந்துள்ள ஐயப்பாட்டைத் தீர்க்க சனாதிபதி சந்திரிகா ஒரு 'மினித்' தேர்தலை விரும்புகிறார்.

1999 ஜனவரியில் சிறிலங்காவின் தேர்தல் சரித்திரத்திலேயே மிகப் பெரிய வன்முறைக் களமாக விளங்கிய வடமேல் மாகாணசபைத் தேர்தலில் பொ.ஐ.மு வெற்றி பெற்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையாக விளங்கிய இம்மாகாணத்தின் நிர்வாகத்தை எவ்வாறேனும் கைப்பற்றிவிட வேண்டும் என்பதற்காக அதி உச்சபட்ச வன்முறைகள் அப்போது ஆட்சியிலிருந்த பொதுசன ஐக்கிய முன்னணியினரால் தூண்டிவிடப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரச்சார மேடைகள் பொ.ஐ.மு குண்டர்களால் துவம்சம் செய்யப்பட்டன. ஐ.தே.க.பொதுக் கூட்டங்களை நடத்தவோ சுவரொட்டிகளை ஒட்டவோ முடியாத நிலை ஏற்பட்டது. தென்னிலங்கை முழுவதிலுமிருந்து குண்டர்களும் பாதாள உலகக்குழுவினரும், வடமேல் மாகாணத்தில் கொண்டுவந்து குவிக்கப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியினால் வீடு வீடாகச் சென்றே பிரச்சாரங்களை மேற்கொள்ள முடிந்தது. ஜே.வி.பியினரும் தாக்கப்பட்டனர்.

1994 இல் சந்திரிகா குமாரதுங்க தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிபீடமேறியபின் நடைபெற்ற தேர்தல்களுக்கு முன் அவர் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வது வழமை. அதில் பெற்ற "வெற்றிகளை" யே அவர் தேர்தல்களுக்கு மூலதனமாக்கி வந்தார். ஆனால் 1999இல் நடைபெற்ற தேர்தல் அவ்வாறானதல்ல கிளிநொச்சியை இழந்து ஜெயசிக்குறு தோல்வியடைந்த நிலையில் இராணுவ நடவடிக்கைகளை மூலதனமாக்க அவரால் முடியவில்லை. அதனால் அத்தேர்தலில் வெற்றி பெற பாரிய வன்முறை நடவடிக்கையொன்றை வடமேல் மாகாணத்தில் நடத்தினார் தேர்தலில் "வெற்றி" பெறவும் அவரால் முடிந்தது..

இப்போது மீண்டும் வேறொரு விதமான சூழலில்

**வேலவன்**

வடமேல் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ள அவர் தயாராகி வருகின்றார்.

இப்பொழுது அவரிடம் பாராளுமன்ற அதிகாரம் இல்லை. பொலிஸ் படை அவரது பூரண கட்டுப்பாட்டில் இல்லை. எனவே வன்முறையை தூண்டிவிடுவது அல்லது ஏற்படுத்துவது அவருக்கு இலகுவானதாக இராது.

கடந்த பொதுத்தேர்தலில் நடந்த தேர்தல் வன்முறையில் சம்பந்தப்பட்ட அவரது மாமனார் அனுருத்த ரத்வத்த மச்சான்மார்கள் மற்றும் சனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவுப் பணிப்பாளர் ஆகியோரை மீட்க முடியாத நிலையில் அவ்வாறு அவர் பாரிய வன்முறையில் இறங்கவும் முடியாது.

அடுத்ததாக உலக நாடுகளின் அங்கீகாரத்தோடு நடைபெற்று வரும் சமாதான முயற்சிகளைக் குழப்பும் வகையில் வெளிப்படையாக இயங்குவது அவருக்குப் பாதகமாகவே முடியும். இவ்வாறான ஒரு சூழ்நிலையில், வட-மேல் மாகாண சபைத் தேர்தலைச் சந்திக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், அதிகரித்துவரும் விலைவாசி, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் வேறு தென்னிலங்கைக்கு உரித்தான சில பிரச்சினைகள் காரணமாக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு குறைவடைந்திருக்கும் என பொதுசன ஐக்கிய முன்னணி நம்பு கிறது. அத்துடன் ஜே.வி.பி.யுடனான கூட்டும் அதற்குப் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

எனவே பொதுசன ஐக்கிய முன்னணி தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்குத் தயாரிப்புகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணியைப் பொறுத்தவரை கடந்த ஓராண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் ஏற்பட்ட சாதகமான நிலையால் பொருளாதாரத் துறை சந்தித்த மாற்றங்கள், சமாதான முயற்சிகளுக்கு மக்கள் வழங்கக்கூடிய ஆதரவு என்பன பற்றி அறிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரம் இன்னமும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வசமுள்ளதால் சமாதானப் பேச்சுக்களிலும் சரி ஏனைய விடயங்களிலும் சரி பெரும் முட்டுக்கட்டைகளையே ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சந்தித்து வருகின்றது. பொதுசன ஐக்கிய முன்னணி உருவாக்கிவிட்டுச் சென்ற பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டிய நிலையில் ஓர் உறுதியற்ற ஆட்சியதிகாரத்தை வைத்துக் கொண்டு நிர்வாகத்தை நடத்துவது மிகப்பெரும் சிரமமாகும்.

எவ்வேளையிலும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைக் கலைத்துவிடும் அதிகாரத்தை பொ.ஐ.மு. கொண்டிருக்கையில் முதலீட்டாளர்களும் பங்குச் சந்தை வியாபாரிகளும் நாட்டம் காட்டச் செய்வது சிரமமாகும். இப்பொழுது அது பெற்றுவரும் பொருளாதார அனுகூலங்களும் சமாதான முயற்சியின் எதிர்காலத்திலேயே தங்கியிருப்பது வெளிப்படையாகும். எனினும் சமாதான முயற்சிகளையும் தமக்கு விரும்பியவாறு மேற்கொள்ள முடியாதுள்ளமை அதன் அனைத்து முயற்சிகளையும் பாதிப்படையச் செய்வதாக உள்ளது.

அத்துடன் அதிகரித்துவரும் விலைவாசிகள் ஐக்கிய தேசிய முன்னணிக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. இது அரசாங்கத்தின் செல்வாக்கைக் குறைத்துவிடுமோ என்ற அச்சமும் அரசாங்கத்திடம் உள்ளது.

இவ்வாறு சமாதான முயற்சிகளால் ஏற்பட்ட சாதகத் தன்மையைப் பாதிப்படையச் செய்யும் நிகழ்வுகள் ஒருபுறம், விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை எந்த நேரத்திலும் அரசாங்கம் கலைக்கப்படலாம் என்ற அச்சம் என்பன ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு நிம்மதியற்ற நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

இவ்வாறான நிலையில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளத் தயாராகும். அது, அதில் வெற்றிபெறுவதன் மூலமே தனது இருப்பைப் பாதுகாக்க வேண்டிய நிலை உள்ளது.

எவ்வாறாயினும், சிறிலங்காவில் இனிவரப்போகும் தேர்தல்கள் வன்முறைகளற்றதாகவும் நேர்மையானவையாகவும் அமையமுடியுமா? என்ற கேள்வியும் எழுகிறது. அவ்வாறு தேர்தல் வன்முறை கட்டவிழ்த்துவிடப்படுமானால் அது பெரும் பூகம்பமாகவே இருக்கும். பொலிஸ் அதிகாரம் அரசாங்கத்திடமும் முப்படைகளின் அதிகாரம் பொ.ஐ.மு.விடமும் இருக்கையில் அது தவிர்க்க முடியாது போகும்.

# ஜப்பான் மாநாட்டின் முன்மொழிவிற்கு வடக்கு-கிழக்கு தேவைகள் குறித்த மதிப்பீடு

## - கிளி.யில் ஐந்து நாட்கள் நடைபெற்ற செயலமர்வு

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பாக எதிர்வரும் யூன் மாதம் 20ஆம் திகதி ஜப்பானின் டோக்கியோ நகரத்தில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் உதவிகளைப் பெறுவதற்காக வடக்கு - கிழக்கிற்கான தேவைகளை இனம் கண்டு உரிய ஆவணங்களை சிறிலங்கா அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் இணைந்து சமர்ப்பிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான சர்வதேச நிபுணத்துவத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்கள் அதாவது, யு.என். எச்.சி.ஆர். யூனிசெவ், யு.என்.டி.பி. போன்ற நிறுவனங்கள் இணைந்து செயற்படுத்துவதற்கான ஒப்பந்தத்தின் பேரில் மேற்படி நிறுவனங்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இவ்வாறு சிரான் செயலகப் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ் கிளிநொச்சியில் இடம்பெற்ற ஐந்து நாள் செயலமர்வு தொடர்பாகக் கருத்து வெளியிடு கையில் கூறினார்.

வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும் சென்று வெளிநாட்டு வள அணியினரையும். உள்ளூர்வள அணியினரையும் இணைத்து கடந்த . ஒரு மாதமாக மேற்படி பகுதிகளில் எத்தகைய தேவைகள் உள்ளன என்பதை இனம் கண்டு அடுத்த ஐந்து தொடக்கம் ஏழு வருடங்களில் பூர்த்தி செய்யப்பட வேண் டிய தேவைகள் என்பவற்றைக் கணிப்பீடு செய்து அதை இறுதி வடிவமாகத் தயாரித்து சம்பந்தப்பட்டவர்கள் மக்கள் அரச உத்தியோகத்தர்கள் போன்ற பல்வேறு பட்டவர்களுக்கு நாம் கண்டறிந்த பிரச்சினைகளைத் தெரியப்படுத்தி இது சம்பந்தமாக அவர்களிடம் கருத்துக்களைக் கேட்டறிந்தோம். அதற்கமைவாக அவர்களின் கருத்துரைகளில் எக்கருத்துக்களைப் புதிதாக இணைக்க வேண்டும், எக்கருத்துக்களை மாற்ற வேண்டும் எனவும் எதனை முதன்மைப்படுத்த வேண்டும் என நாம் ஒரு மதிப்பீட்டு செயற்பட்டறையை நடாத்தினோம். இதில் நாம் கண்டறிந்த விடயங்களை துறைசார்ந்ததாக பதினொரு துறைகளாக வகைப்படுத்தி பதினொரு செயல் முறை அமர்வுகளாக வட்டக்கச்சியில் அமைந்துள்ள தாயக கோவை திட்டமிடல் பணிமனை செயலகத்தில். மதிப்பீட்டறிக்கை தயாரிப்பு இடம்பெற்றது. இத்தகைய பதினொரு பிரிவிற்கும் மத்திய அரசாங்கம், மாகாண அரசாங்கம், சர்வதேச நிறுவனங்களின் பிரிவுகள், அரச அதிபர்கள், மாவட்ட உத்தியோகத்தர்கள், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவர்களின் மேற்படி கருத்துக்களில் தாம் கண்டறிந்த விடயங்களைத் தெரிவித்தனர். இச்செயற்பாட்டின் மூலம் அவர்கள் கண்டறிந்த விடயங்களை மாற்றி அமைக்க முடிந்ததுடன் தவிர்க்கப்பட்ட முக்கிய விடயங்களை மீள இணைக்கக் கூடியதாகவும் அமைந்தது. முன்னுரிமை கொடுக்கப்பட்ட தேவை அற்ற விடயங்களை நீக்கக் கூடியதாகவும் அமைந்தது. அதன்படி முதலாவது மதிப்பீட்டு அறிக்கை சென்ற சனிக்கிழமை (22-03-2003) நிறைவுபெற்றது. அடுத்த கட்டமாக இதில் கலந்து பேசிய அனைத்து விடயங்களையும் ஒன்று சேர்த்து ஒரு ஆவணமாகத் திருப்பி தயாரிக்கப்படும். எதிர்வரும் 28, 29, 30ஆம் திகதிகளில் இந்நிகழ்வு கொழும்பில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் குறிப்பிட்ட அதாவது, ஐந்து பேர் அல்லது ஆறு பேர் அடங்கிய குழுவினர் மேற்கொள்வார்கள். பின்னர் மீண்டும் ஒரு ஆவணத்தை தயாரித்து விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் மேலதிகத் திருத்தத்திற்காக கையளிக்கப்படும். பின்னர் ஏப்ரல்10ஆம் திகதி அளவில் இவ் ஆவணம் முழுமையான நிலையை அடையும்.

இவ் ஆவணம் தனித்தனியான நிகழ்ச்சித் திட்டத்தில் அமையாவிட்டாலும் ஓரளவுக்கு வடக்கு - கிழக்கின் எதிர்கால வளர்ச்சிக்கு எவை எவை தேவையோ அவற்றை அடிப்படை மையமாகக் கொண்டு முன்னுரிமை படுத்தப்பட்டதாக அமையும். வடக்கு - கிழக்

(7ஆம் பக்கம் பார்க்க)

"ஜப்பானில் ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறுவதும், ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதும் ஒரு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகவே நாம் கருதுகின்றோம். ஏனெனில், அவரின் பிரசன்னமானது இப்பேச்சுவார்த்தைக்குச் சர்வதேச பரிமாணத்தைக் கொடுத்துள்ளது.

– புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

# சமாதானப் பேச்சுப் பெறும் சர்வதேசப் பரிமாணமும்

# உள்நாட்டில் சந்திக்கும் நெருக்கடிகளும்

**நோ**ர்வே அரசு ஏற்பாட்டாளர் என்ற ரீதியில் இனப்பிரச்சினை விவகாரத்தில் ஈடுபாடு காட்டத்தொடங்கியதும் சர்வதேச விவகாரங்களுக்குள் நுழைந்த இனப் பிரச்சினை விவகாரமானது தற்பொழுது அதாவது, ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் ஜப்பானில் நடைபெற்றமையும், ஜப்பானின் விசேட தூதுவர் யசுகி அகாஷி இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டமையும் இப்பிரச்சினை விவகாரமானது சர்வதேசப் பரிமாணங்களை மேலும் பெற்றுச்செல்வதையே வெளிப்படுத்துவதாகவுள்ளது.

ஜப்பான் ஒரு பொருளாதார வல்லரசு என்பது வெளிப்படையானது. இது வரையில் - 2 ஆம் உலக மகாயுத்தத் தோல்வியின் பின் - சர்வதேச அரசியலில் மூக்கை நுழைத்துக் கொள்ளாமல் தனது கடின உழைப்பின் மூலம் பொருளாதார வல்லரசு என்ற நிலை எட்டிய ஜப்பான் அண்மையில் தனது வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றங்களைச் செய்து கொண்டுள்ளது.

ஜப்பானின் இந்நிலைப்பாட்டு மாற்றமானது சிறிலங்காவில் இருந்து ஈராக் வரையில் தெளிவாகவே உள்ளது. இந்த வகையில் இலங்கை தொடர்பான விடயத்திலும் ஜப்பான் அரசு அக்கறை காட்டுகின்றது என்று கூறலாம். அது மட்டுமல்ல, தமது அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டைகள், தடைகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றையும் தாண்டிச் செல்லவும் ஜப்பான் தீர்மானித்து விட்டது.



எடுத்துக்காட்டாக, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா ஜப்பான் அரசை எச்சரித்தபோதும் அதனை ஜப்பான் பொருட்படுத்தியதாக இல்லை. அதாவது, தென்னாசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் விருப்பத்திற்கு மாறான நிலைப்பாட்டை ஜப்பான் எடுக்கத் தீர்மானித்து விட்டது என்பதே அதில் முக்கியமானதாகும்.

தமது நாட்டில் ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதென ஜப்பான் தீர்மானித்தபோதே இலங்கை இனப்பிரச்சினையில் ஜப்பான் தீவிர அக்கறை காட்டத் தொடங்கிவிட்டது என்பது வெளிப்படுத்தப்பட்டதாகியது. ஆயினும், இந்தியா அது குறித்துத் திருப்தி கொள்ளாத நிலையிலும் ஜப்பான் இனப்பிரச்சினையில் ஆர்வம் காட்ட முனைந்தமையானது இப்பிராந்தியத்தில் இந்தியாவின் அபிலாசைகளுக்கும் மேம்பட்டதாக தமது நிலைப்பாடு உள்ளது என்பதை ஜப்பான் வெளிப்படுத்திக் காட்டிவிட்டதெனலாம்.


இந்நிலையில், நோர்வேயுடன் ஜப்பானும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் பங்குதாரிகள் ஆகியுள்ளன. எனின் அது மிகையாகாது. ஜப்பானின் இப்பிரவேசமானது நிச்சயமாக இனப்பிரச்சினை விவகாரத்தை சர்வதேச முக்கியத்துவத்திற்குரியதொன்றாக்கியது.

மறுவளமாக, நோர்வேயுடன் ஜப்பானையும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் நேரடியாகப் பங்கேற்கும் ஒரு தரப்பாகவும் மாற்றியது. இந்த வகையில் சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச அங்கீகாரமும், அதன் மூலம் பெரும் உதவியும் கிடைக்கக்கூடியதொரு சூழ்நிலை உருவாகியுள்ளது.

இவ்வாறாக, இனப்பிரச்சினைக்கு சர்வதேச அங்கீகாரமும், சிறிலங்காவிற்குப் பெரியளவில் நிதி உதவியும் கிடைக்கப் பெறுவதற்கான அரசியல் சூழ்நிலை வெளியில் நிலவுகின்றபோதும் சிறிலங்காவிற்குள் அத்தகையதொரு சூழ்நிலை காணப்படுவதாக இல்லை. இதனை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பொன்று வெளிக்காட்டுகின்றது.

சமூக நல அமைப்பொன்று அண்மையில் நடாத்திய கருத்துக்கணிப்பின் பிரகாரம், சிங்களவர்கள் மத்தியில் நோர்வே தலைமையில் முன்னெடுக்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு சிங்களவர்கள் மத்தியில் அதிருப்தி அதிகரித்து வருவதாகத் தெரியவருகின்றது. கடந்த ஆண்டில் 17.9 சதவீதமாக இருந்த இவ் அதிருப்தி இவ்வாண்டு பெப்ரவரியில் 29.4 வீதமாக அதிகரித்த போக்கைக் காட்டியுள்ளது.

சர்வதேச மத்தியஸ்துவத்திற்கு சிங்களவர்கள் மத்தியில் காணப்படும் அதிகரித்த போக்கிலான எதிர்ப்பு உணர்விற்கு ஜே.வி.பி.யும், பொ.ஐ.முன்னணியும் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான பிரச்சாரங்களே முக்கிய காரணமாகும். சமாதான முயற்சிகளையும், சர்வதேச மத்தியஸ்துவத்தையும் எதிர்க்கும் இச்சக்திகள் பௌத்த பேரினவாத



சக்திகளுக்குத் தலைமைதாங்க முற்பட்டுள்ளதோடு சமாதான முயற்சிகளில் அக்கறை காட்டும் மேற்கு நாடுகளின் நிலைப்பாட்டிற்கு மாறான நிலைப்பாடுகளையும் உறுதியாக எடுக்க விழைகின்றன.

இச்சக்திகள் குறிப்பாக பொ.ஐ. முன்னணி இத்தகைய நிலைப்பாட்டை மேற்கொள்வதற்கு பிராந்திய சக்தியாகக் கணிக்கப்படும் இந்தியாவின் ஆதரவு கிடைக்கப்பெறும் என்ற நம்பிக்கையும் காரணமாக இருக்கலாம். ஏனெனில், இனப்பிரச்சினை விவகாரம் பெற்றுவரும் சர்வதேசப் பரிமாணமானது இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்டதொன்றாக இல்லை என்பதையே அண்மைய நிகழ்வுகள் காட்டுகின்றன.

குறிப்பாக சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பல் ஒன்று தாக்கி அழிக்கப்பட்டமை தொடர்பாக இந்தியா வகித்த பாத்திரமானது இதனை வலியுறுத்துமாப்போல் உள்ளது. அதாவது இக்கப்பல் தொடர்பான தகவல்களை இந்தியாவே சிறிலங்கா கடற்படைக்கு வழங்கியது என்பதே பொதுவான அபிப்பிராயமாகும்.

இந்தவகையில் பார்க்கையில், இனப்பிரச்சினை சர்வதேச முக்கியத்துவத்தையும் அதனைத் தீர்ப்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள் சர்வதேச ஆதரவைப் பெற்றவையாக இருக்கையில், சிறிலங்காவிலும், பிராந்தியத்திலும் அதற்கு எதிரான சக்திகள் தமக்குள் இணக்கப்பாட்டுடன் செயற்படும் வகையில் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில், சமாதான முயற்சிகளை வெற்றிபெறச் செய்வதென்பது சிறிலங்கா அரசாங்கத்தினதும், சர்வதேச நாடுகளினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. அதாவது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசாங்கம் சமாதான முயற்சிகளில் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் செயற்படும் அதேவேளை, சர்வதேச சமூகம் அதற்கான ஆதரவை வழங்குதல் வேண்டும்.

ஆனால், சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் அரசியல் தீர்வு நோக்கிய முன்னேற்றமே கடன் உதவியைத் தீர்மானிக்கும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவையாக உள்ளன. இதனை சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உறுதிப்படுத்தியுள்ளார். அதாவது, யூன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டிற்கு முன் சமஷ்டி முறையிலான தீர்வுத் திட்ட முன்வரைவொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டியுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

சர்வதேசத்தின் இந்நிலைப்பாடானது அரசியல் தீர்வு நடவடிக்கைகளை உறுதி செய்வதற்கானவையாக இருப்பினும்கூட இன்று சிறிலங்கா அரசாங்கம் எதிர் நோக்கும் நெருக்கடிக்கு நிபந்தனை விதிப்பதாகவும் அமையக்கூடும். இது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதற்கு வாய்ப்புகளும் உண்டு.

அதுமாத்திரமல்ல வடக்கு-கிழக்கிற்குத் தேவையாகவுள்ள உடனடி மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்ய முடியாததொரு சூழ்நிலையைத் தோற்றுவிப்பதாகவும் அமையக்கூடும். இந்நிலையானது சமாதான முயற்சிகளில் இன்று நம்பிக்கை கொண்டிருக்கும் தமிழ் மக்களையும் அதன் மீதான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதாக அமையக்கூடும்.

ஆகையினால், சமாதான முயற்சிகளைப் பாதுகாக்கவும் மக்களின் மனிதாபிமான அத்தியாவசிய தேவைகளை வழங்குவதையும் உறுதி செய்ய வேண்டுமானால் சர்வதேச உதவிகள் வழங்கப்படுதல் என்பது அவசியமானதொன்றாகியுள்ளது. குறிப்பிட்ட நோக்கத்திற்காக வழங்கப்படும் உதவிகளுக்கு நிபந்தனைகள் விதிக்கப்படுவது வழமையும், அவசியமும் ஆயினும், சமாதான முயற்சிகள் பாதிப்புறும் அளவிற்கு நிபந்தனைகள் கடுமையானவையாக இருப்பின் சமாதான முயற்சிகள் கேள்விக்குரியவையாக மாறுவது தவிர்க்க இயலாது போய் விடலாம்.

- ஜெயராஜ்

## உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

"ஆஅவ" கடன் இல.1846 - SRI(SF)

# கேள்வி கோரல் - இல. 03

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு, கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்டக் கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | ஆகக் குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. | MU/NECORD/ED/01 | முல்/புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் 90'x25' இரண்டு மாடிக்கட்டடத்தை நிறைவு செய்தல். | ,000 | M7 | 25,000 |
| 02. | MU/NECORD/ED/03 | முல்/சிலாவத்தை இ.த.க. பாடசாலையில் இரண்டு 110'x25' வகுப்பறைக்கட்டடங்கள் நிர்மாணம். | 1,000 | M7 | 35,000 |
| 03. | MU/NECORD/ED/04 | முல்/அம்பலவன்பொக்கணை அ.த.க. பாடசாலையில் 110'x25' வகுப்பறைக் கட்டடத்தை நிறைவு செய்தல். | 1,000 | M9 | 3000 |
| 04 | MU/NECORD/ED/05 | முல்/புதுக்குடியிருப்பு கணேஷ வித்தியாலயத்தில் மூன்று 110'x25' வகுப்பறைக் கட்டடங்கள் நிர்மாணம். | 1,000 | M6 | 55,000 |
| 05. | MU/NECORD/ED/17 | முல்/உடுப்புக்குளம் அ.த.க. பாடசாலையில் 120'x25' வகுப்பறைக்கட்டடம் நிர்மாணம். | 1,000 | M8 | 20,000 |
| 06. | MU/NECORD/ED/25 | முல்/முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் 110'x25' மாடிக்கட்டடம்,இரண்டு பிரிவு விஞ்ஞான ஆய்வுகூடம், 90'x25' கட்டடத்தை நிறைவு செய்தல், 150'x30' பிரதான கேட்போர் கூடத் திருத்த வேலைகள். | 1,000 | M6 | 90,000 |
| 07. | MU/NECORD/HS/04 | ஒலுமடு சித்த ஆயுர்வேத மருந்தக கட்டட நிர்மாணம். | 1,000 | M8 | 20,000 |
| 08. | MU/NECORD/LS/01 | முல்லைத்தீவு மிருக வைத்தியர் அலுவலகம், விடுதி நிர்மாணம். | 1,000 | M6 | 60,000 |
| 09. | MU/NECORD/LS/02 | ஒட்டுசுட்டான் மிருக வைத்தியர் அலுவலகம், விடுதி மீள் நிர்மாணம். | 1,000 | M6 | 60,000 |
| 10. | MU/NECORD/RD/01 | வற்றாப்பளை, கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு வீதியில் 8.7 கி.மீ..8.9 கி.மீ9.4 கி.மீ. களில் மூன்று 5.196மீ நீளமான பாலங்கள் அமைத்தல். | 1,000 | M5 | 1,10,000 |
| 11. | MU/NECORD/AG/01 | ஒலுமடு கமநல கேந்திர நிலையம் மீள் நிர்மாணம். | 1,000 | M7 | 50,000 |
| 12. | MU/NECORD/FI/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒன்பது கிராமங்களில் மீனவர்களுக்கான ஓய்வு அறை கட்டுதல். | 1,000 | M7 | 50,000 |
| 13. | MU/NECORD/ID/01 | முல்லைத்தீவு மாவட்டத்தில் பதவிநிலை உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்களுக்கான 10 அறை கொண்ட விடுதி அமைத்தல். | 1,000 | M6 | 6 50 00 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICTADடுடன் மேற்படி M7க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

4. பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5. தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக்கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD முல்லைத்தீவில் பெற்றுக் கொள்ளலாம்.

6. ஒப்பந்த ஆவணங்களை 2003 மார்ச் 27இலிருந்து 2003ஏப்ரல் 10வரை முற்பகல் 9.30இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து பந்தி 2இல் குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

7. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று இதன் முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2003 ஏப்ரல் 08 முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

8. கேள்வி முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

9. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி முல்லைத்தீவிற்கு 2003 ஏப்ரல் 24 முற்பகல் 11.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்பட வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாகமாட்டார்.

**திருமதி இமெல்டா சுகுமார்,**
தலைவர்,
மாவட்டக் கேள்விச்சபை / அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-8031)



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே பெரும்பான்மையின ரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கின்றது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 26-03-2003

## ரணிலின் தலைவலி!

ஜப்பானில் யூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்பதாக ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கு இரண்டு பணிகள் நிர்ப்பந்தமாகவே வந்துள்ளன. ஒன்று, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி முறையிலான திட்டவரைபு ஒன்றை தயாரிப்பது. இரண்டு, வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான திட்டவரைபை முன்வைப்பது.

சிறிலங்கா அரசாங்கம் இன்று இனப்பிரச்சினை விவகாரத்தில் காட்டும் அக்கறையின் பெரும்பகுதி உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்தும், சர்வதேச நிதிநிறுவனங்களிடமிருந்தும் பெரும் தொகையான நிதியைக் கடனாகப் பெறும் நோக்கிலானது என்பது வெளிப்படையானது. இன்று இலங்கைக்கான நிதி உதவியினைத் தீர்மானிக்கும் ஒன்றாக சமாதானப் பேச்சுக்களே உள்ளன எனின் அது மிகையாகாது.

ஆனால் சர்வதேச சமூகம் சிறிலங்காவிற்கு உதவி வழங்கப்படுவதனால் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் முன்னேற்றம் காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தி வருகின்றமையானது சிறிலங்கா அரசிற்கு ஒருவகையில 'தலைவலி' கொடுப்பதாகவே உள்ளது.

ஐ.தே.முன்னணி அரசாங்கம் சமஷ்டி ஆட்சிமுறையினை ஏற்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்த போதும் உடனடியாக அதற்கு அது சாத்தியமானதொன்றாக இருக்கப்போவதில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சமஷ்டி ஆட்சி முறைக்கான திட்டவரைபு ஒன்றை முன்மொழியவிருப்பினும் கூட அது சிறிலங்காவில் அங்கீகாரம் பெறக்கூடியதாக - சாத்தியப்பாடான தொன்றாக இருக்குமா என்பது சந்தேகமே.

ஒருபுறம் சமஷ்டிமுறையிலான ஆட்சி நிர்வாக மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான அரசியல் பலம் அவரிடம் இல்லை. அத்தோடு சமஷ்டி ஆட்சிமுறைக்குச் சிங்களவர் மத்தியில் ஆதரவு என்பது குறைவாகவேயுள்ளது. இந்நிலையில் சமஷ்டி திட்டவரைபு ஒன்றினைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்வைத்தல் என்பது அதற்கு அரசியல் ரீதியில் அழுத்தத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கும்.

அடுத்ததாக, வடக்கு - கிழக்குக்கான அவசர மனிதாபிமானத் தேவைகள் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான முன்வரைபுத் திட்டங்களை முன்வைக்க வேண்டிய அவசியமும் உள்ளது. சிறிலங்காவிற்கு உதவுவோர் மாநாட்டில் அத்திட்டம் முன்வைக்கப்படும் பட்சத்திலேயே நிதி உதவி எதிர்பார்க்கின்ற அளவில் கிடைக்கப்பெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால், வடக்கு - கிழக்கு புனர்வாழ்விற்கான திட்டங்கள் குறித்த நடவடிக்கைகள் சர்வதேச நிதி நிறுவனங்களான உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா.அபிவிருத்தி நிதியம் போன்றவற்றால் முன்வைக்கப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுவரினும் தென்னிலங்கையில் அதற்கு எதிரான அரசியல் செயற்பாடுகளும் இல்லாமலில்லை.

அதாவது, இலங்கைக்கான நிதியுதவியில் பெரும்பாலானவை வடக்கு - கிழக்கிற்கு ஒதுக்கப்படவுள்ளதாகவும் அந்நிதியுதவி விடுதலைப்புலிகளின் கையில் போய்சேரவுள்ளதாகவும் பிரச் சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு சர்வதேச நிதியுதவி குறித்து தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள் குறித்து ஜப்பானில் விசேட தூதுவர் யசுகி அகாஷி கூட ஜப்பானில் பேச்சுவார்த்தை நடந்த காலத்தில் பிரஸ்தாபித்திருந்தார். கொழும்பில் உள்ள ஊடகங்கள் உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிட்டு வருவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், யூன் இல் ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்பாக பிரதமர் ரணில் ஆற்றவேண்டிய மேற்கூறப்பட்ட பணிகள் இரண்டும் அரசியல் ரீதியில் அவருக்கு அழுத்தங்களையும், நெருக்குதல்களையும் கொடுக்கக்கூடியவையே. ஆனால், சிறிலங்கா அரசாங்கம் நெருக்கடிகள், அழுத்தங்கள் என்பவற்றிலிருந்து மீண்டுவருவதானால் இவற்றிற்கு பிரதமர் ரணில் முகம்கொடுத்தே ஆகவேண்டும். அதுமட்டுமல்ல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நெருக்கடிகளை எவ்வாறு முகங்கொடுக்கப் போகின்றார் என்பதற்கு இது ஒரு பரீட்சைக்களமாகவும் அமையக்கூடும்.

# தமிழ்மொழிமூல ஆசிரிய வெற்றிடங்கள் மூன்று வருடங்களுக்குள் நீக்கப்படும்

### அமைச்சர் கொடித்துவக்கு கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டில் உள்ள தமிழ்மொழி மூல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை இன்னும் மூன்று வருடங்களுக்குள் நீக்கப் படும் என்று கல்வி, கலாச்சார மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பாடசாலை நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இத்தகவல் களை வெளியிட்டார்.

சிங்கள மொழிமூலப் பாடசாலை களில் ஆசிரியர் மேலதிகமாக உள்ள அதேநேரம் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் பெரு மளவு ஆசிரிய வெற்றிடங்கள் நிலவிவருவது தெரிந்ததே.

# தேர்தல் முறைகளை மாற்றியமைக்க ஆளும், எதிர்க்கட்சிகள் இணக்கம்

(கொழும்பு)

சிறிலங்காவில் தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன.

இதற்கான சிபார்சு வழங்கப் பாராளுமன்றக் குழுவொன்றையும் தெரிவு செய்வதற்கும் இரு பகுதியினரும் முடிவு செய்துள் ளனர்.

இம்மாற்றத்திற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்த மலையக அமைச்சர்களைச் சந்தித்து மகிந்த ராஜபக்ஷ பேச்சு நடத்திய பின் அவர்கள் தெரிவுக் குழு அமைப்பது பற்றி விருப்பம் தெரிவித்துள்ளதாகத் தெரிவித் துள்ளார்.

விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றுதல், மாவட்ட எம்.பி. முறைக்குப் பதிலாக முன்னைய தொகுதிவாரி முறையை அமுல் செய்தல், எம்.பி. பதவி வெற்றிடமாகும் போது இடைத்தேர்தலை நடத்துவது போன்ற விடயங் களும், சனாதிபதிக்கு வழங்கப் பட்ட அதிகாரங்களை நீக்குதல் பற்றியும் தெரிவுக்குழு ஆராயும்.

இந்தத் தெரிவுக்குழுவின் விசேட அம்சம் பொதுமக்களின் பிரச்சினைகளுக்கு நேரடி விளக்கம் அளிக்கப்படுவதாகும்.

எதிர்வரும் வாரங்களில் நியமிக்கப்படவுள்ள இத்தெரிவுக் குழுவுக்கு சகல கட்சிகளையும் சேர்ந்த பிரதிநிதிகள் அங்கம் வகிக்கவுள்ளனர்.

# அமெ. - பிரி.தூதரகங்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

### கொழும்பில் படையினர் உஷார் நிலையில்!

(கொழும்பு)

கொழும்பில் சிறிலங்காப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஈராக் மீதான அமெரிக்க மற்றும் பிரித்தானியப் படையினரின் தாக்குதல்களைக் கண்டித்து உலகளாவிய ரீதியில் தீவிர மடைந்துவரும் கடும் எதிர்ப்பு நடவடிக்கைகளையடுத்தே கொழும்பிலுள்ள அமெரிக்க, பிரித்தானிய தூதரகங்களுக்கு பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப் பட்டுள்ளது.

மேலும் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கு கலகமடக்கும் பொலிசாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் ஈராக் போருக்கு எதிராக பேரணிகளை நடாத்த சிறிலங்கா அரசு அனுமதியளித் துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஜே.வி.பி-பொ.ஐ.மு இடையே

# அரசிற்கெதிரான நடவடிக்கையில் ஈடுபட மற்றுமொரு புரிந்துணர்வு ஒப்பந்தம்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி. யும் அரசுக்கு எதிராகப் பிரச்சார நடவடிக்கை களில் ஈடுபடுவதற்காக புதிதாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திடவுள்ளன.

இது தொடர்பான இறுதிக் கூட்டம் இன்று வியாழக்கிழமை சனாதிபதியின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளாக கலாநிதி சரத் அமுனுகம, நிமல் சிறிபால மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் நாயகம் மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் இக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக் கையில்: சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் தனது அரசியல் நடவடிக்கைகளை ஒன்றாக முன்னெடுத்துச் செல்லத் தீர்மானித்துள்ளன. ஐ.தே.மு அரசாங்கத்தை கவிழ்ப்பதே இரு கட்சிகளினதும் இலட்சியமாகும் எனத் தெரிவித்தார்.

### ஜப்பான்...

குப் பகுதிகளுக்கு கோடிக்கணக்கிலான பணம் தேவைப்படுவதால் மேற்படி நாம் எதிர்பார்க்கும் பணம் கிடைக்காவிட்டாலும் கிடைக்கக்கூடிய பணத்தைப் பயன்படுத்தலாம். இவ் ஆவணம் தயாரிக்கப்பட்ட பின்னர் விடுதலைப்புலிகளாலும் சிறிலங்கா அரசாலும் இணைந்து ஒரு உத்தரவு வழங்கப்படும். இவ் ஆவணம் டோக்கியோவில் வைத்து உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் வைத்து உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்படும். பின்னர் உதவிவழங்கும் நாடுகள் இவற்றைப் பரிசீலித்து இதில் அடக்கப்பட்டுள்ள எத்தகைய வேலைத் திட்டங்களுக்கு தம்மால் நிதி உதவி வழங்க முடியும் என உலக நாடுகள் தீர்மானிக்கும். கிட்டத்தட்ட இந்த நடைமுறை அமுலாக ஏறத்தாள ஒருவருட காலம் தேவைப்படும். நிதி உதவி எமக்கு கிடைக்க அல்லது இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த மேற்குறித்தகாலம் தேவைப்படும். அத்தகைய நிதியைப் பெற்றுக் கொள்வதற்கான ஆயத்த வேலைத்திட்டங்கள் இப்போது நடைபெற்று வருகின்றன எனவும் குறிப்பிட்டார்.

அவர் நடைபெற்று முடிந்த பட்டறை பற்றிக் கூறுகையில், மேற்படி பட்டறை ஆரம்பத்தில் இலங்கையின் வெவ்வேறு பகுதியில் அதாவது, அனுராதபுரம், திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சியில், இரண்டு தம்புல்ல போன்ற பகுதிகளில் நடைபெறத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் விடுதலைப்புலிகளின் வேண்டுகோளுக்கு ஏற்ப அனைத்து நிறுவனங்களும் மேற்படி பட்ட றையை வட்டக்கச்சியில் நடத்த ஒப்புக்கொண்டன. இப்பகுதிகளில் இங்குள்ள மக்கள் அல்லது இவை சார்ந்த உத்தியோகத்தர்கள் அல்லது விடுதலைப் புலிகளின் துறைசார்ந்தவர்களின் குரல் சரியான முறையில் ஒலிக்கப்பட வேண்டும் என்பதும், கருத்து சரியாக இணைக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இங்கு அழைக்கப்பட்டனர். இத்தகைய செயல் ஏறத்தாள மிகவும் நல்லமுறையில் பிரேரிக்கப்பட வாய்ப்பளித்துள்ளதுடன் கருத்துக்கள் நல்ல முறையில் உள்வாங்கப்பட்டதாகவும் அவர் கூறினார். அடுத்து இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் இடம்பெறவிருக்கும் மீள் எழுதுதல் வேலைகளில் மேற்படி கருத்துக்கள் மிகவும் நல்ல முறையில் பிரதிபலிக்கப்படவுள்ளன என்றும் இத்தகைய முயற்சிகள் மிகவும் நல்ல முயற்சி எனவும் அவர் மகிழ்ச்சி தெரிவித்தார். எனினும் சில துறைகளில் சில கருத்து முரண்பாடுகள், சில நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கலாம். அவற்றை நாம் ஒருங்கிணைந்து மிகவும் நல்ல அறிக்கையாகத் தயாரிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(சோ. லோ)

- யுனிசெவ் நிறுவனத்தினால் -

# கிளி. முல்லை வைத்தியசாலைகளுக்கு அத்தியாவசிய வாகனங்கள் கையளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் நிறுவனத்தினரால் கிளிநொச்சி, முல்லைத்தீவு



(படம் சோதி

மாவட்டங்களிலுள்ள வைத்திய சாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகளும், கழிவகற்றும் வண்டியும், பெறுமதிமிக்க சுகாதார உபகரணங்களும் நேற்று பி.ப 3.00 மணிக்கு கிளி.மாவட்ட பிரதி மாகாண சுகாதாரப் பணிமனையில் வைத்து அந்தந்த வைத்திய சாலை வைத்திய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

கிளி. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், யுனிசெவ் கொழும்பு தலைமைச் செயலக வழங்கற் பகுதி அதிகாரிகள் அஸ்மின் செறிவ்டீன், ஸ்ரான்லி அற்றநாயக்க, யுனிசெவ் மல்லாவி வதிவிடப் பிரதிநிதி பெனிபுரூவ், தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அருண், முல்லை மாவட்டபி.மா.சு.சே.பணிப்பாளர் ஜெயகுலராஜா, கிளி. மாவட்ட பதில் மா ட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சத்தியேந்திரா, முழங்காவில் வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி தர்மேந்திரா மற்றும் சுகாதார திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கிளி,முல்லை, முழங்காவில் வைத்தியசாலைகளுக்கான மூன்று புதிய அம்புலன்ஸ் வண்டிகளை அந்தந்த வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளிடமும் மற்றும் புதிய கழிவகற்றும் இயந்திரம், வாகனம் மற்றும் சுகாதார உபகரணங்களை கிளி.மாவட்ட பி.மா.சு.சே.பணிமனை களஞ்சிய அதிகாரி முருகேசம்பிள்ளையிடம் கையளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேற்படி அதிகாரி யினால் கிளி, முல்லை, முழங்காவில் வைத்தியசாலைகளுக்கான சுகாதார உபகரணங்கள் அந்தந்த வைத்தியசாலைகளுக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (சோ,லோ)

# போராட்டத்தில் இணைய வந்த சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(அலுவலக செய்தியாளர்)

போராட்டத்தில் இணைந்த இரு சிறுமிகள் பெற்றோரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 18 வயதிற்கு குறைந்த இரண்டு சிறுமிகளையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் வைத்து நேற்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (பா)

# பாடசாலை மாணவர்களுக்கு மாட்டுவண்டிச் சேவை!

### கரிப்பட்டமுறிப்பில் நடத்த ஏற்பாடு

கரிப்பட்டமுறிப்பு அ.த.க. பாடசாலைக்கு ஐந்து மைல் தூரத்தில் இருந்து வருகைதரும் மாணவர்களின் நன்மைகருதி மாட்டு வண்டி போக்குவரத்துச் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

மாட்டுவண்டிச்சேவை மூலம் மாணவர்களை ஏற்றியிறக்கும் சேவையின் வெள்ளோட்ட விழா நாளை காலை 10 மணிக்கு அதிபர் யேசுதானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது. சிறப்பு விருந்தினராக தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார். (பா)

## சீனக்கப்பல்....

ஒருவான செழியன் இந்த அறிக் யை கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளார்.

சீனப் படகுகள் க்கப்பட்ட சம்பவத்திற்கும் வ லைப் புலிகளுக்கும் எந்த ான தொடர்புகளும் இல்லை அவ் அறிக்கையில் கூறப்பட்டு .

அதேவேளை, இச்சம்பவம் குறித்து சிறிலங்கா கடற்படையிடம் இருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மேற்படி படகுகள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அறிக்கை அடுத்த சில தினங்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ரஷ்யா....

நவீன இலத்திரனியல் சாதனங்களை இயக்குவதற்கு ஈராக்கியர்களுக்கு பயிற்சியளிக்கும் நோக்குடன் ரஷ்ய தொழில் நுட்பவியலாளர்கள் அங்கு சென்றிருக்கலாம் என்று அமெரிக்கா நம்புகின்றது.

இரவு நேரங்களில் பார்க்கக் கூடிய கண்ணாடிகள், டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள், இலத்திரனியல் செயற்பாடுகளை குழப்பும் உபகரணங்கள் என்பவற்றை ரஷ்யா ஈராக்கிற்கு விற்பனை செய்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் தடையுத்தரவையும் இது மீறுவதாகவும் சனாதிபதி புஷ். ரஷ்ய சனாதிபதியிடம் தொலைபேசி வாயிலாக கூறியுள்ளார்.

இத்தகவலை அமெரிக்க வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

# வவு.வளாக கல்விசாரா ஊழியர்கள் அடையாள மறியல் போராட்டம்

இன்று யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக கல்விசாரா ஊழியர்கள் அடையாள மறியல் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

கல்விசாரா ஊழியர்களுக்கு உரிய திகதியில் சம்பளம் வழங்கப்பட வேண்டும், கல்விசார் ஊழியர்களுக்கு கடன் உதவிகள் வழங்கப்படுவது போன்று தமக்கும் வழங்கப்பட வேண்டும், கல்விசாரா ஊழியர்களுக்கு தங்குமிட வசதிகள் ஏற்படுத்தித்தரவேண்டும் எனும் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் இன்று 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை அடையாள வேலை நிறுத்தத்திலும், மறியல் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளனர்.

## ஆறு பிள்ளை....

மேற்படி நபரை வாகனம் ஒன்று மோதிவிட்டு நில்லாமலே சென்றுவிட்டது.

மோதப்பட்ட நபர் சம்பவ இடத்திலேயே பலியானதாகத் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பளை காவல் துறையினர். விசாரணையினை மேற்கொண்டதுடன் சடல பரிசோதனையின் பொருட்டு சடலத்தினை கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு சடலப் பரிசோதனை இடம்பெற்றது.

கிளி.மாவட்ட நீதியாளர் முரளி அவர்கள் ஸ்தலத்திற்கு சென்று ஸ்தல விசாரணை மேற்கொண்டார்.

ஆழியவளை உடுத்துறையைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான வி.வேலையா (வயது 50) என்பவரே மேற்படி சம்பவத்தில் பலியானவராவார்.

பளை காவல்துறையினர் இவ் விபத்து குறித்து துரிதவிசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (சோ.லோ)

## கடும்...

ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று நாள் போருக்கு பின் பலத்த கனரக ஆயுதங்களைக் கொண்டுள்ள அமெரிக்கப் படைப் பிரிவு ஒன்று நஸ்ரியா நகரையும் யூப்பிரட்டிஸ் நதியையும் கடந்து சென்றுள்ளதாகவும் இருப்பினும் நஸ்ரியா இன்னமும் ஈராக்கின் கைகளிலேயே இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மற்றொரு முறையில் பாக்தாத் நகரத்தின் தென்பகுதியை பாதுகாக்கின்ற ஈராக்கின் குடியரசு படையினருக்கும், அமெரிக்க கூட்டுப் படையினருக்கும் இடையில் பலத்த சண்டை நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உல்ஹசர், பஹ்ரா, அல்.நஸஸ்ரீனா இங்குஸ் முஸ்ரா, சுர்தாவ் ஆகிய நகரங் களில் அமெரிக்க படைகளுக்கும் ஈராக் படைகளுக்கும் இடையில் கடும் சண்டை நடந்து வருகின்றது.

உல்ஹசர் துறைமுக நகரை முழுமையாக தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டதாக பிரிட்டிஷ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தப் போரின் மிகக் கடுமையான சண்டை இனி மேல்தான் நடக்கும் என்றும் அமெரிக்காவின் ராணுவத்தாக்குதல் தாமதமாக வரலாம். ஆனால் நிறுத்தப்படமாட்டாது என்றும், அமெரிக்க முப்படைகளின் தளபதி தெரிவித்துள்ளார்.

இதுவரை நடைபெற்ற சண்டையில் 70 அமெரிக்கப் படையினரும் 20 பிரிட்டன் படையினரும் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள அமெரிக்கா பலர் காணாமல்போயுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பஸ்ராவின் அரைவாசிக்கு மேற்பட்ட மக்களுக்கு சுத்தமான தண்ணீர் இல்லாமையால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நோய்கள் வரும் ஆபத்து உண்டு என ஐ.நா.தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஈராக்கின் பஸ்ரா நகருக்குள் நுழைந்த அமெரிக்கா மற்றும் பிரித்தானிய பீரங்கிப் படைகள் மீள அழைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பெற்றுக்கொள்ளவும்

கிளிநொச்சி பழையசந்தை திருநகர் வீதியில் கைப்பை ஒன்று செல்வராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும். (சோ,லோ)

## தேவை.....

மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் அவர்களிடம் கேட்ட போது,

கிளிநொச்சி மாவட்டத்திற்கென 14ஆயிரம் லீற்றர் பெற்றோலும், 65,000 லீற்றர் டீசலும் அனுப்பிவைக்கப்பட்டுவந்தது.

தற்போது கிளி.மாவட்டத்தில் முன்னைய வாகனங்களை விட புதிய வாகனங்களின் பாவனைகள் அதிகரித்துள்ளமையினையும், அத்துடன் ஏ-9 வீதி திறப்பின் காரணமாக வட, தென் பகுதி வாகனங்கள் ஏ-9 பாதையூடாக பயணிப்பதன் காரணத்தினாலும் மேலதிக அளவில் இம்மாவட்டத்திற்கு எரிபொருட்கள் தேவைப்படுவதால் கிளி.மாவட்டத்திற்கு ஒருலட்சத்து நாற்பத்தாறாயிரத்து முன்னூற்று முப்பத்தாறு (1,46,336) லீட்டர் பெற்றோலும் ஒன்பது லட்சத்து இருபத்தோராயிரத்து அறுநூற்று எண்பது லீட்டர் டீசலும் தேவைப்படுகின்றது. எனவே மேற்படி அளவிலான எரிபொருட் களினை கிளி.மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கும் வண்ணம் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினருக்கு கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்கள் வேண்டுகை விடுத்திருந்தார்.

அவ்வேண்டுகையின் பிற்பாடு தேவையின் மூன்றில் ஒருபகுதி அதாவது நாற்பத்தி ஏழாயிரத்து தொளாயிரத்து நான்கு (47,904) லீட்டர் பெற்றோலும் மூன்று இலட்சத்து அறுபத்தையாயிரத்து எண்ணூற்று நாற்பது (3,65,840) லீற்றர் டீசலும் கிளி.மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

தற்போது கிளி.மாவட்டத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ள வாகனங்களின் பதிவுகளை அரச செயலகம் அனுப்பிவைக்கும் படி வேண்டுகை விடுக்கப்பட்டுள்ளதுடன், அதனடிப்படையிலேயே எரிபொருட்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அரச செயலகத்திற்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் தெரிவித்துள்ளதெனவும் தெரிவித்தார்.

தற்போது கிளிமாவட்டத்தில் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் வாகனங்கள், மின்பிறப்பாக்கிகள் இங்கு பெருமளவில் எரிபொருளில் இயங்கி வருகின்றன. அத்துடன் ஏ-9 பாதையூடாக பயணிக்கும் வாகனங்களும் இங்கு எரிபொருட்களை நிரப்பிச் செல்கின்றன. அத்துடன் வன்னிக்கு வெளியில் உள்ள மாவட்டங்களில் பதிவுகளை மேற்கொண்டுள்ள வாகனங்கள் இங்கு பாவனையில் ஈடுபட்டுள்ள நிலையில் அவ்வாகனங்களும் இங்கு பதிவுக்குட்பட்ட வாகனங் களுக்கு அனுப்பிவைக்கப்படும் எரிபொருட்களையே பெற்றுக்கொள்ளவுள்ளன. இதனால் இங்கு எரிபொருளிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதற்கு காரணியாக அமையவுள்ளது. (சோ, லோ)

## வீரச்சாவு....

வீரச்சாவடைந்தவராவார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# 15ஆம் ஆண்டு நினைவில்



| | |
|---|---|
| தாய் மடியில் | கல்லறையில் |
| 1967 □ 12 □ 11 | 1988 □ 03 □ 27 |

## வீரவேங்கை தனேந்திரன்/மேரிதாஸ்

**[சவிரிப்பிள்ளை அன்ரன் கிறிஸ்ரினோல்ட்]**

**மாரீசன்கூடல், இளவாலை, யாழ்ப்பாணம்.**

**நற்றவத்தால் வந்துதித்த கருந்தனமே**
**சற்குணனாய் எல்லவர்க்கும் நல்லவனாய்**
**பெற்றவரும் பெருங்கல்வி தந்தவரும்**
**பெருமையுற கலைகளிலே சிறந்தவனே**
**விற்பனனாய் போராற்றல் மிக்கவனாய்**
**சான்றோர் நின் தகைமையினால் அதிர்ந்திடவே**
**அற்புதனாய் கரிகாலன் படையணியில்**
**பற்றுறுதி கொண்டுன்னை அற்பணித்தாய்**
**சற்றேனும் தயங்காத விடுதலைக்காய்**
**முக்காலும் உழைத்ததனை மறப்போமா!**

எமது அன்புச் செல்வம் மாவீரன் தனேந்திரனின் 15ஆம் ஆண்டு நினைவான 27-03-2003 அன்றைய நாளில் இம்மாவீரனின் நேசிப்பிற்குரிய போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் எங்களுடன் மதிய உணவில் கலந்த கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

த.மு:
ஊற்றுப்புலம்,
புதுமுறிப்பு, கிளிநொச்சி.

(சி-7817) **பெற்றோர், சகோதரர்கள்.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.